[2006 ஆகஸ்ட் 22

67—

திருக்கோயில் குளங்கள்

***501—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் நகரத்திலுள்ள அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான குளங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றித் தூர் வாரிப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் நகரத்திலுள்ள அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான குளங்களில் காணப்படும் ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்குளங்களைத் தூர் வாரிச் சீரமைக்கத் திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால், மாவட்ட நிர்வாகத்தின்மூலமாகத் தூர் வாரிச் சீரமைக்கத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்கு, நகரத்திலே மட்டும் கிட்டத்தட்ட 55 குளங்கள் இருக்கின்றன. அவற்றிலே 26 குளங்கள் தற்போது பகுதியாகவும், முழுமையாகவும் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. ஆகவே, தீ விபத்துக்கள் ஏற்படுகிறபோதுகூட, இதுபோன்ற குளங்களிலிருந்து நீரை எடுப்பதற்குள்ள வாய்ப்பு வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. இன்றைக்கு நீர்நிலைகளை மேம்படுத்த, நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்குப் பல வகைகளிலே முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற இந்தக் காலக்கட்டத்திலே, இதுபோன்ற குளங்களிலே இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுவது மிகவும் அவசியமாகிறது. எனவே, அரசு இதற்கு ஏதேனும் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2006 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னதைப்போல, இன்னும் கூடுதலாகவே, மொத்தம் 151 குளங்கள் அந்த ஆலயத்திற்குச் சொந்தமான குளங்கள் இருக்கின்றன. ஆக்கிரமிப்பில் உள்ள குளங்கள் 7 குளங்கள் இருக்கின்றன. அவற்றிலே பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு இருக்கக்கூடியவை தற்போது 30 குளங்கள்தான். அந்தக் குளங்களிலும்; மத்திய அரசினுடைய சமச்சீர் வளர்ச்சித் திட்டத்தின்கீழே கடந்த 31–3–2006 முதல் 16 குளங்கள் தூர் வாரப்பட்டுள்ளன. எஞ்சிய குளங்களையும் தூர் வாருவதற்கான பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டு, வெகு விரைவிலே அது தீர்த்து வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகரத்தில் மேல்திருத்தணி என்ற இடத்திலே அமைந்திருக்கின்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான குளத்தைச் சீரமைப்புச் செய்து, அங்கே வருகின்ற பல பக்தர்கள் தவறி விழுந்து இறப்பதை, சுற்றுச்சுவர் வேலி போட்டுத் தடுக்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி, வேதாரண்யேஸ்வரர் சம்பந்தப்பட்ட கேள்வி. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பற்றித் தனிக் கேள்வியாகக் கேட்டால், பதிலும் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

திரு. எல்.பி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்திற்கு உட்பட்ட சிறப்புமிக்க அருள்மிகு பண்ணாரி அம்மன் திருக்கோயில் உள்ளது. அங்கு பக்தர்கள் நிறையப் பேர் வருகிறார்கள். அவர்கள் உணவு உண்பதற்கும், ஓய்வு எடுப்பதற்கும் விடுதி இல்லை. அதை அரசு கட்டித் தருமா என்று பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்ற கேள்விகளைத் தனிக் கேள்விகளாகக் கேட்டால், ஏதுவாக இருக்கும். அதே நேரத்தில், தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான அரசு, அனைத்து ஆலயங்களிலும் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு உறுதிபூண்டிருக்கின்றது. வெகு விரைவில் உறுப்பினரது கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

68—

மீன்பிடித் துறைமுகம்

***1368—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இராமன்துறைக்கும், தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இராமன்துறைக்கும், தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட இராமன்துறைக்கும், கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடையில், தாமிரபரணி நதி கடலில் கலக்கும் இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக 200 இலட்சம் ரூபாய் முதல் தவணையாகவும், 72.75 இலட்சம் ரூபாய் நில ஆர்ஜிதம் செய்வதற்காகவும் அரசு ஒதுக்கியிருப்பதாக மானியக் கோரிக்கையின்மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஏற்கெனவே